(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 PTM 3E2**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** — **மதிப்பெண்கள் : 50**

**மூன்றாம் பருவம்** — **நேரம் : 3 மணி**

# ஆய்வியல் நெறிமுறைகள்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. ஆராய்பவனைத் திவாகர நிகண்டு எவ்வாறு கூறுகிறது?

   அ) அறிஞன் ஆ) ஆய்வாளன் இ) கவிஞன் ஈ) நுண்ணறிவாளன்

2. அறிவியல் ஆய்வின் சிறப்புக் கூறுகள் எவை?

   அ) உற்று நோக்கல் ஆ) தரவுகளை வகைப்படுத்துதல்

   இ) தரவுகளின் பொருண்மை தெரிதல் ஈ) அனைத்தும் சரி

3. தொல்காப்பியம் எத்தனை வகையான உத்திகளைக் கூறுகிறது?

   அ) 22 ஆ) 20 இ) 16 ஈ) 32

4. ஆராய்ச்சியாளர்களுக்கு அரிய வழிகாட்டிகளாக அமைபவை எவை?

   அ) களஞ்சியங்கள் ஆ) நூல்கள் இ) எழுதுபொருட்கள் ஈ) புகைப்படக்கருவி

5. Plagiarism என்ற சொல்லின் பொருள் யாது?

   அ) பெறுதல் ஆ) திருடுதல் இ) கடத்துதல் ஈ) கடன்வாங்குதல்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. அறிவின் அடையாளத்தைத் திருவள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார்?
7. அறிவியல் ஆய்வின் இன்றியமையாதனவற்றில் இரண்டினைக் கூறுக.
8. உத்தி என்பதன் பொருள் யாது?
9. நூலகங்களில் எவையெல்லாம் கிடைக்கும்?
10. காற்புள்ளி எதற்காக இடப்படுகின்றது?

**பகுதி – ஆ** **( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ). அறிவும் ஆராய்ச்சியும் அமைய வேண்டிய தன்மையைச் சுட்டுக.

(அல்லது)

ஆ). சிக்கலைக் குறித்த மூன்று வகை வினாக்களை எழுதுக. **(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

12. அ). சோதனை ஆய்வின் பண்புகளுள் சிலவற்றைக் கூறுக.

(அல்லது)

ஆ). வரலாற்றுமுறை ஆய்வு குறித்து அறிஞர் ஸ்பென்சர் கூறுவனவற்றை உரைக்கவும்.

13. அ). எவ்வகை உத்திகளின் வழியாகப் பிறர் மனத்திலுள்ள விருப்பு, வெறுப்புகளை வெளிக்கொணர முடியும்?

(அல்லது)

ஆ). கருதுகோளைச் சோதிப்பதற்குரிய தரவுகளை விளக்குக.

14. அ). வினாநிரலுக்கும், பட்டியலுக்குமான வேறுபாட்டை இயம்புக.

(அல்லது)

ஆ). ஆராய்ச்சி செய்வோர் எவ்வகை ஆய்வடங்கல்களைக் காண வேண்டும்?

15. அ). மேற்கோள் அறம் என்றால் என்ன?

(அல்லது)

ஆ). ஐயத்திற்குரிய இடங்களையும், பிழை திருத்தும் முறைகளையும் ஆசிரியர் எவ்வாறு சுட்டியுள்ளார்?

## பகுதி – இ (5x5=25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ). ஆய்வாளர்களுக்குரிய தகுதிகளைச் சிறப்பித்தெழுதுக.

(அல்லது)

ஆ). ஆய்வுச் சிக்கலை வரையறுத்தலை விளக்கி உரைக்கவும்.

17. அ). ஒப்பீட்டு முறை ஆய்வின் சிறப்பியல்புகளைத் திறனாய்க.

(அல்லது)

ஆ). புள்ளிவிவரஆய்வு முறையின் இன்றியமையாமைகளை ஆய்க.

18. அ). கள ஆய்வுக்குத் திட்டமிடுதல் குறித்த செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ). சமூக சேவகர் ஒருவரை நீ நேர்காணல் நடத்துதலின் மாதிரியை எடுத்தியம்புக.

19. அ). வினாநிரலின் வகைகளைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ). ஆய்வேட்டின் அகக்கட்டமைப்பு குறித்து விவரி.

20. அ). மொழியின் ஆளுமைக்கு குறியீடுகள் துணை செய்யும் திறத்தை ஆய்ந்தெழுதுக.

(அல்லது)

ஆ). இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுகளை வகைப்படுத்துக.



****